**TAMIL**

# *The Spoken Word*

*by*

WILLIAM MARRION BRANHAM

# இயேசுவும் சபிக்கப்பட்ட லேகியோனும்

## (JESUS AND THE LEGION OF THE DAMNED)

ஏழாம் தூதன்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

"உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து"

கதரா தேசத்தைச் சேர்ந்த இம்மனிதன் ஒரு பக்தியுள்ள பிசாசைக் கொண்டிருந்தான். நமக்கு அது எப்படித் தெரியும்? அவன் ஓடிச் சென்று, இயேசுவைத் தொழுது கொண்டான். இப்பொழுது, ஒருவேளை நீங்கள் சரியாக இருக்கலாம். ஒரு நிமிடம் பொறுங்கள். பிசாசு இயேசுவை பணிந்து கொண்டான். அவன் அவரை வெளிப்படையாக அறிக்கை பண்ணி, "இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே" என்றான்.

**சகோ. பிரன்ஹாம்**

# இயேசுவும் சபிக்கப்பட்ட லேகியோனும்

## (JESUS AND THE LEGION OF THE DAMNED)

நான் இந்தப் பிற்பகலில் லேகியோன் அசுத்த ஆவிகள் பிடித்திருந்த மனிதனைக் குறித்து உங்களுக்கு வாசித்துக் காட்ட விரும்புகிறேன். இம்மனிதன் சபிக்கப்பட்ட லேகியோனுடன் வாசம் பண்ணினான் என்று உண்மையாகவே அது கூறக்கூடியதாய் உள்ளது. நான் மாற்கு 5ம் அதிகாரத்திலிருந்து வாசிக்கிறேன்.

(மாற்கு 5:1 முதல் 3 வரை)

**பின்பு அவர்கள் கடலுக்கு அக்கரையிலுள்ள கதரேனருடைய நாட்டில் வந்தார்கள்.**

**அவர் படவிலிருந்து இறங்கினவுடனே, அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் பிரேதக் கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான்.**

**அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது; அவனைச் சங்கிலிகளினாலும் கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது.** (தயவுசெய்து 4வது வசனம் முதல் 13ம் வசனம் வரை வாசியுங்கள்):

அலைகள் ஆர்ப்பரிக்க, அவர்கள் கடலைக் கடந்து சென்று கொண்டிருக்கையில், அந்த இரவில் இயேசுவை என்னால் காண முடிகிறது. அவர் அன்று பகல் வேளையில், போதித்து, வியாதி

யஸ்தரைச் சுகமாக்கி விட்டு, அந்த இரவில் ஏன் படகில் பயணம் செய்வதைத் தெரிந்து கொள்ள நேர்ந்தது? ஏனென்றால் வேறொரு தேசமாகிய கதராவில் (Gadara), ஒரு ஆத்துமா அவரைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தது. வெறுமனே ஒரு ஆத்துமாவை இரட்சிக்க – ஒரு நபரை சுகமாக்க அவர் ஒரு கடல் கடந்து வந்தார் என்பதை சற்று எண்ணிப்பாருங்கள். இந்தப் பிற்பகல் வேளையிலும் உங்களில் யாராவது ஒருவரை விடுவிக்கும்படி அவர் மகிமை யிலிருந்து (இறங்கி) வருவார்! அவர் உள்ளே பிரவேசிக்கக்கூடிய உத்தமமான இருதயத்தை அவர் சரியாகக் கண்டு கொள்ளட்டும், அவர் பகலிலோ அல்லது இரவிலோ எந்த வேளையிலும் வருவார். நான் அதற்காக சந்தோஷப்படுகிறேன்; அவர் என்னுடைய அடைக் கலமாகவும் – ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமா யிருக்கிறார் என்பதையும் அறிந்து கொள்வதற்காக நான் சந்தோஷப் படுகிறேன்.

அந்தக் கதரா தேசத்தில், இந்த பைத்தியம் பிடித்த மனிதனைத் தவிர வேறு யாரும் இந்நேரத்தில் உதவியைப் பெற்றதாக எந்தக் குறிப்பும் நம்மிடம் கிடையாது. அந்நிலையில் இருந்த அந்த பரிதாபமான மனிதனைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள். ஒருகாலத்தில் அவன் ஒரு நல்ல பிரஜையாக (குடிமகனாக) ஒருக்கால் இருந்திருப்பான். நாம் நம்முடைய கற்பனையைக் கொண்டு இதை விளக்கமாகக் கூறலாம். ஒருக்கால் சில கூட்டம் பேர் அவனோடு சென்று, அவனைச் சபையை விட்டு விலகச் செய்யவும், அல்லது அவனை தேவனை விட்டுத் தூரமாக போகச் செய்யவும் ஆக்கியிருக்கலாம். நீங்கள் அறியும் அடுத்த காரியம் என்னவெனில், அடுத்த கட்டமாக பிசாசு அவனைப் பிடித்து, ஒருக்கால் அவன் குடிக்கத் தொடங்கியிருக்கலாம். எனவே அவன் அப்படியே தொடர்ந்து பின்வாங்கிப் போய்க் கொண்டிருந்தான். சிறிது காலம் கழிந்த பிறகு, பிசாசு அவனை பைத்தியம் பிடித்த நிலைக்குத் தள்ளினான். அவன் பைத்தியம் பிடித்த நிலையில், கல்லறைகளில் வசித்து வந்தான். அவன் நிச்சயமாகவே ஒரு பயங்கரமான மனிதனாக இருந்திருக்க வேண்டும். அவர்கள் அவனைச் சங்கிலிகளைக் கொண்டு கட்டினார்கள், ஆனால் அவை எதுவும் இல்லாதது போல அவனால் அந்தச் சங்கிலிகளை

உடைத்துப் போட முடிந்தது. அது அவனுடைய மனித பலம் அல்ல. அது பிசாசினுடைய பலமாய் இருந்தது, அதுதான் அதைச் செய்து கொண்டிருந்தது. பிசாசு பலமுள்ளவனாயிருக்கிறான், ஆனால் தேவனோ அதிக பலமுள்ளவராயிருக்கிறார்.

சிறிய சகோதரி கார்ட்டரைக் கண்டது எனக்கு நினைவுக்கு வருகிறது, அவளுடைய கை கால்கள் ஒரு துடைப்பக்குச்சியைக் (broomstick) காட்டிலும் மிகப் பெரியதாக இருக்கவில்லை. அவள் அங்கே ஏறக்குறைய ஒன்பது வருடம் எட்டு மாதங்களாக படுத்த படுக்கையாய் இருந்தாள். தேவனுடைய வல்லமை அவளைத் தொட்ட போது, அவள் எழுந்து ஆர்கன் இசைக்கருவியை நோக்கி ஓடிச்சென்று, “இயேசுவே, என்னை சிலுவையண்டையில் வைத்திரும்” என்ற பாடலை இசைத்தாள். அவள் இன்றும் ஜீவித்துக் கொண்டிருக்கிறாள், அவள் சுகமடைந்து 11 வருடங்கள் ஆகிறது. அது முதற்கொண்டு அவள் ஒருமுறையும் வியாதியினால் படுக்கை யில் கிடந்ததில்லை. யாரோ ஒருவர், “அவள் எவ்வாறு நடந்தாள்?” என்று கேட்டார். நான், “ஜீவனுள்ள தேவனுடைய வல்லமை தான் அவளை எழுப்பினது” என்று பதிலளித்தேன். அவள் தேவனுடைய வல்லமைக்கு தன்னை ஒப்புக் கொடுத்தாள்.

உங்கள் சகோதரனாகிய நான் ஒரு தரிசனம் காண்பதை நீங்கள் காணும் போது, அது நான் பரிசுத்த ஆவிக்கு என்னை ஒப்புவிப்பதே அல்லாமல் வேறு எதுவுமல்ல. வியாதியஸ்தராகிய நீங்கள் உங்களை நீங்களே பரிசுத்த ஆவிக்கு சமர்ப்பிக்கக் கூடுமானால், எந்த உபத்திரவமும் உங்களைப் பிடித்து வைக்க முடியாது. அப்போது நீங்கள் சுகமாகி, சாட்சி கூறலாம். பாவத்தில் இருக்கிற நீங்கள் விடுவிக்கப்பட முடியும். அப்படியே உங்களை நீங்களே முழுவதுமாக தேவனுக்கு விட்டுக் கொடுத்து, என்ன சம்பவிக்கிறது என்று பாருங்கள். அதுதான் முழு காரியத்தின் சாராம்சமாய் உள்ளது. அங்கே அதற்கு எந்த இரகசியமும் இல்லை. நீங்கள் உங்களை தேவனுக்கு சமர்ப்பிக்கும் போது, அதற்கு மேலும் அது நீங்களல்ல, ஆனால் அதைச் செய்வது கர்த்தராக உள்ளது. இன்று நாம் அந்த நல்வாய்ப்பைக் கொண்டிருக்கிறோம் என்பதற் காக நீங்கள் சந்தோஷமாய் இல்லையா?

ஒருக்கால் சிறிது நேரத்தில் லேகியோனுக்கு புத்தி தெளிந்திருக் கலாம், அப்போது அவன், “நான் இங்கே என்ன செய்து கொண் டிருக்கிறேன்?” என்று வியப்படைந்தான். சங்கிலிகள் அவன் மேலிருந்தன, அவனுடைய சரீரம் முழுவதும் காயப்பட்டிருந்தன. அதன்பிறகு பிசாசு அவனை வேறொரு வசீகர வல்லமைக்குள் தள்ளினான். ஒருக்கால் அவன் தன்னுடைய புத்தி தெளிந்த நிலையில் (rational moments) அவனுடைய மனைவியைக் குறித்தும் பிள்ளைகளைக் குறித்தும் நினைத்திருப்பான்.

இயேசுவின் படகு அந்த நாட்டை அடைந்து, அவர்கள் கரையில் ஏறத் துவங்கின போது, இதோ இம்மனிதன் பிரேதக் கல்லறை மயானத்திலிருந்து வருகிறான். பிசாசு அவனை எங்கே வசிக்கும்படி செய்திருந்தான் என்பதைக் கவனியுங்கள். அதுதான் பிசாசு அடிக்கடி செல்கிற நல்லதொரு இடமாகும் – மரித்தவைகள் இருக்கும் ஒரு இடத்தைச் சுற்றிலும் தான் அவன் அடிக்கடி போகிறான். அது இன்றும் உண்மையாகவே உள்ளது; அக்கிரமங் களிலும் பாவங்களிலும் மரித்து, கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையில் விசுவாசம் கொண்டிராத நபர் பிணங்களை புதைக்கும் இடுகாட்டில் தான் ஜீவித்துக் கொண்டிருக்கிறான்.

தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து, அதின் பெலனை மறுதலிக்கிற இந்த சடங்காசார சபைகளில் சில அதைப் போன்று தான் உள்ளன. அவர்கள் தேவனுடைய வல்லமையைக் குறித்துப் பேசி, “இது உணர்ச்சிவசப்படுதல், அவ்வளவு தான். இது எல்லாமே பைத்தியக்காரத்தனமும், மனோதத்துவம் சார்ந்த காரியங்களும் தான்” என்கின்றனர். பிசாசுகள் முடிவில் புத்திகூர்மை என்ற காரியத்திற்கே அவர்களை வேகமாகத் தள்ளி விடுகின்றன. இயேசுவின் நாட்களில் அவரைப் புறக்கணித்துத் தள்ளின பிரதான ஆசாரியர்களும் வேதபாரகர்களும் அதிக மெருகூட்டப்பட்ட வேதாகம பண்டிதர்களாயிருந்தனர். அந்த அதே பக்திவாய்ந்த பிசாசு தான் இன்றும் ஜனங்களை மாற்றி விடுகிறான்.

இப்பொழுது இயேசு வந்த உடனே, இம்மனிதன் ஓடி வந்து, மிகவும் பக்தியுள்ளவனாயிருக்க விரும்பினான். அந்தவிதமாகத் தான் பிசாசு செய்கிறான். பிசாசினால் பக்தியுள்ளவனாகவும்,

புத்திசாலியாகவும், கற்றறிந்த மேதையாகவும், மெருகூட்டப் பட்டவனாகவும் இருக்க முடியும்.

அதன்பிறகு இந்த பைத்தியக்காரன் தரையில் விழுந்து இயேசுவை வணங்கினான். நீங்கள், “பிசாசா அதைச் செய்தான்?” என்று கேட்கலாம். ஏன், யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுத்த போது, அவன் கூட இயேசுவை முத்தம் செய்தானே. அதுதான் பக்தியுள்ள ஆவிகள். அந்த ஆவிகளை தேவனுடைய ஆவியா என்று அறியும்படி அந்த ஆவிகளைச் சோதித்தறியுங்கள் என்று வேதாகமம் கூறுகிறது.

இந்த பக்தியுள்ள ஆவியை நீங்கள் காலத்தின் துவக்கம் முதல் முடிவு மட்டும் கண்டு கொள்வீர்கள். எப்போதுமே பிசாசினுடைய ஆவி உண்மையான நிஜமான தேவனுடைய ஆவியைப் புறக்கணித்துத் தள்ளியிருக்கிறது. தேவனுடைய ஆவி வருகிற ஒவ்வொரு தடவையும், அற்புதங்களும் அடையாளங்களும் பின்தொடருகின்றன.

பிலேயாம் இஸ்ரவேலரைச் சபிக்கச் சென்ற போது, அவன் ஏழு பலிபீடங்களைக் கட்டி பலி செலுத்தினான். இஸ்ரவேலர்களும் சரியாக அதையே செய்தனர். இப்பொழுது, அதைச் செய்வதி லிருந்து பிலேயாமை தடுத்து நிறுத்த, கர்த்தர் ஊமையான கழுதையின் வழியாக முயற்சி செய்தார், ஆனால் அவன் எப்படியும் அங்கு சென்று, யோகோவாவுக்கு தேவையாயிருந்தது போன்றே ஏழு பலிபீடங்களைக் கட்டி, ஏழு சுத்தமான பலிகளைச் செலுத்தி னான். ஆனால் பிலேயாம் எங்கே தவறினான் என்றால், இஸ்ரவேல ரோடு இருந்த அக்கினிஸ்தம்பத்தை அவன் காணவில்லை. பிலேயாம் தனக்குத்தானே முழுவதுமாக, “நல்லது, நான் அடிப்படை வாதி, எனவே நான் யேகோவாவுக்கு அவசியமாயிருக்கிற பலியை செலுத்தி விட்டு, சென்று அந்த ஜனங்களை சபிப்பேன் – அந்த சுகமளிக்கிற ஆராதனைகளை நடத்துகிற அந்த ஜனங்களை சபிப்பேன்” என்றான். மோசே ஒரு (வெண்கல) சர்ப்பத்தை ஒரு கம்பத்தின் மேல் வைத்தான், அதை நோக்கிப்பார்த்தவர்கள் குண மடைந்தார்கள் (பிழைத்துக் கொண்டார்கள்). அவர்கள் தேவனிட மிருந்து எல்லாவிதமான அற்புதங்களையும் அடையாளங்களையும்

கொண்டிருந்தார்கள். அதுதான் அவர்களை அவர்கள் யார் என்பதாக – தேவனுடைய பிள்ளைகளாக ஆக்கினது.

பிலேயாம், தான் அவர்களை சபித்து விடலாம் என்று எண்ணினான். அடிப்படை ரீதியாக பேசுவோமானால், அவனும் அவர்கள் எவ்வளவு அடிப்படைவாதிகளாய் இருந்தார்களோ அவ்வளவு அடிப்படைவாதியாக இருந்தான், எனவே அவன் பலி செலுத்தி, வேதத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர்களை அந்த இடத்தில் கூட்டினான், அவர்கள் அந்த பலியை சுற்றிலும் நின்று, "மகத்தான யோகோவாவே, நாங்கள் கற்றறிந்த மேதைகள் என்றும் நாங்கள் ஒரு மகத்தான தேசம் என்றும் நீர் அறிவீர்; இந்த ஜனங்களை தடுத்து நிறுத்தும்" என்று கூறினர். ஆனால் தேவன் பிலேயாமின் வாயில் வைப்பதை மாத்திரமே அவன் கூற வேண்டும் என்று தேவன் பிலேயாமிடம் கூறியிருந்தார், எனவே அவன் சென்று, அவன் இஸ்ரவேலரைப் பார்த்த போது, "அவர் இஸ்ர வேலில் அக்கிரமத்தைக் கண்டதுமில்லை... ராஜாவின் ஜெய கெம்பீரம் அவர்களுக்குள்ளே இருக்கிறது" என்றான். அல்லேலூயா!

அங்கே என்ன வித்தியாசம் இருந்தது? மோவாபியர்கள் இஸ்ரவேலர்களைப் போலவே அவ்வளவு அடிப்படைவாதிகளாய் இருந்தனர், ஆனால் வித்தியாசம் என்னவென்றால் தேவன் இஸ்ரவேலர்களைத் தொடர்ந்த அற்புதங்களாலும் அடையாளங்களி னாலும் அவர்களை நிரூபித்துக் கொண்டிருந்தார்.

கடைசி நாட்களில் ஜனங்கள் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாக இருப்பார்கள் என்றும் அவர்களை விட்டு விலகியிருக்க வேண்டும் என்றும் பவுல் கூறியிருக்கிறான். இயேசு, "விசுவாசிக்கிறவர்களை இந்த அடையா ளங்கள் பின்தொடரும்: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்து வார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்" என்றார்.

ஓ, என்னுடைய சகோதரனே, சகோதரியே, திடப்படுங்கள், பெருமழையின் இரைச்சலை நான் கேட்கிறேன். இந்நாட்களில்

ஒன்றில், தேவன் பரலோகத் திரையை பின்னால் இழுத்து (roll back), இரத்தக் கடலினூடாக தங்கள் பாதையில் போராடி, நாம் கொண் டிருக்கப் போகும் ஒரு கூட்டத்தைக் கொண்டிருக்கிற அந்த ஜனங்கள் மேல் பரிசுத்த ஆவியை அளவில்லாமல் ஊற்றுவார்.

ஆனால் நாம் நம்முடைய பிசாசு பிடித்தவனிடம் திரும்பிச் செல்வோம் (லேகியோனைக் குறித்த சம்பவத்தை மீண்டும் பேசத் துவங்குவோம் – மொழிபெயர்ப்பாளர்.).

கதரா தேசத்தைச் சேர்ந்த இம்மனிதன் ஒரு பக்தியுள்ள பிசாசைக் கொண்டிருந்தான். நமக்கு அது எப்படித் தெரியும்? அவன் ஓடிச் சென்று, இயேசுவைத் தொழுது கொண்டான். இப்பொழுது, ஒருவேளை நீங்கள் சரியாக இருக்கலாம். ஒரு நிமிடம் பொறுங்கள். பிசாசு இயேசுவை பணிந்து கொண்டான். அவன் அவரை வெளிப்படையாக அறிக்கை பண்ணி, “இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே” என்றான்.

அவனை விட்டு போகும்படி இயேசு அந்தப் பிசாசுக்குக் கட்டளையிட்டார். இப்பொழுது, பிசாசுக்கு ஒரு நல்ல வாசஸ்தலம் அங்கே இருந்தது, எனவே அந்த நாட்டை விட்டு வெளியேற அவன் விரும்பவில்லை. பிசாசுகளோடுள்ள காரியம் அவ்வாறு தான் உள்ளது. அவைகள் ஒரு கூட்டம் ஜனங்கள் மத்தியில் குடியேறியிருக்கும் போது, அவைகள் அதை விட்டு செல்ல விரும்புவதில்லை. அவைகள் பிடிவாதம் பிடித்தவை. நீங்கள் தெய்வீக சுகமளித்தலை விசுவாசிப்பதில்லை என்று கூறுவீர்களா னால், அது அவ்வாறு உங்களை நம்பச் செய்கிற ஒரு பிசாசாய் உள்ளது.

அதன்பிறகு அந்த சபிக்கப்பட்ட லேகியோன், தாங்கள் போக வேண்டுமானால், அங்கேயிருந்த ஒரு கூட்டம் பன்றிகளுக்குள் போகிறோம் என்று இயேசுவிடம் கேட்டுக் கொண்டன, அவைகள் அங்கே போகும்படி இயேசு உத்தரவு கொடுத்தார். அவன் வஸ்திரம் தரித்து, புத்தி தெளிந்திருக்கிற செய்தி அங்கு பரவின போது. நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்று, உங்களுக்குள் கிறிஸ்துவைப் பெற்றுக் கொள்ளும் போதுதான், நீங்கள் உங்களுடைய சரியான புத்தியில் இருக்கிறீர்கள் என்று நான் உங்களுக்குக் கூறுகிறேன். அவன்

தொழுது கொள்ளும்படியாக தன்னுடைய புத்தி தெளிந்த நிலையில் இருந்தான். அப்போது அவன் எங்கே உட்கார்ந்து கொண்டிருந்தான் என்பதைக் கவனியுங்கள் – அவன் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து கொண்டிருந்தான். உட்காருவதற்கு என்னவொரு அற்புதமான இடம்.

அதன்பிறகு ஜனங்கள் வந்து, தங்களுடைய பன்றிகள் எங்கே என்று கேட்டார்கள். தங்கள் நாட்டை விட்டு வெளியேறும்படி அவர்கள் இயேசுவிடம் கூறினார்கள். எழுப்புதலுக்கு அதிக பணத்தை அவர்கள் கிரயமாக செலுத்த வேண்டியிருந்ததால், அவர்கள் அதை விரும்பவில்லை. அதற்குப் பிறகு அந்தப் பகுதிகளைச் சுற்றிலும் பன்றிகளை வளர்த்துக் கொண்டிருந்த அவர்கள் பேரில் லேகியோனுடைய சாட்சி எவ்வளவு விளைவைக் கொண்டிருந்தது என்பதை நான் மகிமைக்குச் செல்லும் போது, அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

அத்தேசத்து ஜனங்கள் அன்பான இயேசுவோடு இருப்பதைக் காட்டிலும், அந்தப் பன்றிகளோடு இருப்பதையே அதிக சுகமாக உணர்ந்தார்கள். அவர்கள் பிசாசுகளோடும் அந்தப் பன்றிகளோடும் இருப்பதையே அதிக சமாதானமாக உணர்ந்தார்கள், அப்படியிருக்க இன்றும் அதேவிதமாகவே இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா? சில ஜனங்கள் தாங்கள் சபைக்கு கொஞ்சம் பணத்தைக் கொடுப்பதோ அல்லது எழுந்து நின்று விசுவாச பிரமாணத்தைக் கூறுவது தான் அவர்களுக்கு போதுமான மார்க்கம் என்று உணருவதாக கூறுகிறார்கள், ஏன், இன்னும் சரியாகச் சொன்னால், அவர்கள் மார்க்கத்தைக் குறித்து அதற்கு மேல் சற்றும் செவி கொடுக்க மாட்டார்கள். அவர்கள் இயேசுவைக் காட்டிலும் தங்களுடைய பன்றிகளையும் அவர்கள் மத்தியில் இருக்கிற லேகியோனையும் தான் பெரிதளவில் கொண்டிருக்கிறார்கள்.

கொஞ்ச காலத்திற்கு முன்பு, நான் இந்தியானாவிலுள்ள கேரியில் (Gary, Indiana) இருந்தேன். அவர்கள் அந்தப் பெரிய எஃகு ஆலைகளில் ஒன்றை முழுவதுமாக எனக்குக் காண்பித்துக் கொண் டிருந்தார்கள். அந்த மனிதர்கள் வேலை செய்து கொண்டிருந்தார் கள், அப்போது விசில் ஊதப்பட்டது, உடனே அவர்கள் வேலை

செய்வதை நிறுத்தினார்கள். குப்பைகள் நடைபாதைக்குள் பெருக்கிக் கூட்டப்பட்டது. என்னிடம் சுற்றிக் காண்பித்துக் கொண்டிருந்த அம்மனிதன் ஒரு பொத்தானை அழுத்தினான், உடனே ஒரு பெரிய காந்தம் கீழே நடைபாதைக்கு ஒரு தடத்தில் இறங்கி வந்தது, அப்போது எல்லா குப்பைகளுமே அப்படியே அந்தக் காந்தத்தை நோக்கி வேகமாக பாய்ந்து சென்று, காந்த விசையினால் மேலே சென்றன (ஒட்டிக் கொண்டன), பின்னர் அவைகள் மீண்டும் உருக்கி வார்க்கப்படும்படி எரிகலனில் வந்து விழுந்தன.

என்னுடைய வழிகாட்டி, "உமக்கு இது பிடித்தது எப்படி?" என்று கேட்டார்.

நான், "அல்லேலூயா" என்றேன்.

அவர், "என்ன விஷயம்?" என்று கேட்டார்.

நான், "நான் அப்படியே ஏதோவொன்றைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்" என்றேன்.

அவர், "நீர் ஏதோவொன்றைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும். என்ன அது?" என்று கேட்டார்.

நான், "நான் மகிமையிலுள்ள ஒரு மகத்தான காந்தத்தைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்" என்றேன்.

நான், "இந்நாட்களில் ஒன்றில் அவர் கீழிறங்கி வரப்போகிறார். இந்தப் பழைய பலவீனமான சரீரத்தை மேலே எடுத்து மீண்டும் உருவாக்குவார்" என்றேன்.

"இந்த காந்தம் எவ்வாறு அந்தக் குப்பைகளை எல்லாம் மேலே எடுத்துக் கொள்ளவில்லை?"

"அவைகளில் சில அலுமினியமாக உள்ளன – அவைகள் காந்தத்தால் கவருவதில்லை."

நான், "அல்லேலூயா! ஆனால் அந்த இரும்புத் துண்டு ஏன் மேலே போகவில்லை?" என்று கேட்டேன்.

அவர், “காரணம் என்னவெனில், அது போல்ட் கொண்டு இறுக்கப்பட்டுள்ளது” என்று பதிலளித்தார்.

சகோதரனே, நான் ஒவ்வொரு விலங்குகளிலிருந்தும் கட்டவிழ்க்கப்பட்டிருப்பதற்காக மகிழ்ச்சியாயிருக்கிறேன். யாவற்றை யும் விட்டு விட்டு சென்று, கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களை நீங்களே இழந்து விடுங்கள். மறுபடியும் பிறந்து, பரிசுத்த ஆவி யினால் நிறையப்படுங்கள். அவருடைய வல்லமையினால் ஈர்க்கப் படுங்கள், அப்போது அவர் வரும் போது, நீங்கள் அவரோடு போவீர்கள். நான் பவுலைப் போல, “நான் அவரை அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையில் அறிந்து கொள்வேனாக!” என்று கூற வாஞ்சிக்கிறேன். அவர் அவர்கள் மத்தியிலிருந்து என்னை அழைக்கும் போது, இந்தக் காரியங்களை பின்னால் விட்டு விட்டு, உலகத்தை மறந்து விட்டு, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக (இலக்கை) நோக்கித் தொடருகிறேன். அல்லேலூயா!

★★★★★

S.டேனியல் சம்பத் குமார்
எண் 147, திருநிலை காலனி,
விச்சூர் போஸ்ட்,
சென்னை–600 103




for books contact :

**S.DANIEL SAMPATH KUMAR**

No. 147, Thirunilai colony ,
vichoor post , chennai - 600 103

E-Mail : sdanielsampathkumar@gmail.com
Website : danielendtimebooksministry.org
Phone No : 99419 74213 , 96001 71260